# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 255/ந/2017

ஆணை எண். 292/2017

நாள் : 21/12/2017

திரு S. கந்தசாமி,
திண்டுக்கல் – 2. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
(மற்றும்)
பிற துறை அதிகாரிகள். – **எதிர் மனுதாரர்கள்**

திண்டுக்கல், பேகம்பூர், மேட்டுப்பட்டி, 58, ஆடி நாட்டாமைக் காம்பவுண்டு முகவரியில் வசிக்கும் திரு S. கந்தசாமி அவர்களின் 19.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2017 அன்று பெறப்பட்டு 255/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல், பேகம்பூர், மேட்டுப்பட்டி, 58, ஆடி நாட்டாமைக் காம்பவுண்டு முகவரியில் வசிக்கும் திரு S. கந்தசாமி என்பவர் இராஜபாளையம் நகராட்சி, 2006–ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் அச்சிடல் செலவினம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில தகவல்களைப் பெற்று இராஜபாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் பிற துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 7–இல் முறைமன்ற நடுவர் அவர்களின் செயற்பணிகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவு 7–ன் கீழ், உட்பிரிவு (1)–ல் பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கின்ற எழுத்து வடிவிலான முறையீடு எதனையும் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்குறிப்பிட்ட சட்டத்தில், சட்டப்பிரிவு 10(3)(c) –இல் குறிப்பிட்டுள்ளபடி, முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் இம்முறைமன்ற நடுவ

விசாரணை வரம்பில் அமையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள நிகழ்வுகள் 5 ஆண்டுகளுக்கு முந்தையது என அறிய முடிகிறது. எனவே, மனுதாரர் தெரிவித்துள்ள முறைகேடுகளை இம்முறைமன்ற நடுவம் விசாரிக்க இயலாது எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

சென்னை–600 032

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு S. கந்தசாமி,
58, ஆடி நாட்டாமை காம்பவுண்டு,
பேட்டுப்பட்டி,
பேகம்பூர்,
திண்டுக்கல் –2.

2. நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்,
விருது நகர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்